**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 428/2019 P.W.8/Additional Witness**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. பினுலால்சிங் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** 20.07.2026

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் A4, A5 present. A1, A2, A3, A6, A7 ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் ரீத்தாபுரம், இரும்பிலி சந்திப்பில் உள்ள பினு மருத்துவமனையின் தலைமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். ஏற்கனவே அங்கு 25.12.2015-ம் தேதி மருத்துவர் சதீஷ் என்பவர் மருத்துவராக பணியில் இருந்தார். அவர் தற்சமயம் மேற்படிப்புக் காரணமாக வெளியூர் சென்ற காரணத்தினால், அவரையும் அவரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் மருத்துவப் பதிவேட்டின் அடிப்படையில் நான் இன்று சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 25.12.2015-ம் தேதி மேற்படி மருத்துவர் சதீஷ் என்பவர் இரவு 08.54 மணிக்கு பணியில் இருந்த பொழுது 30 வயது மதிக்கத்தக்க சுப்பையா என்பவரின் மகன் **சிவகுமார்** என்பவர் காயசிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை பெயர் தெரியாத நபர்கள் கொண்ட ஒரு கும்பல் பணவிளை, குருசடி சந்திப்பில் வைத்து 25.12.2015-ம் தேதி இரவு 08.30 மணிக்கு இரும்புக் கம்பி, மரக்கட்டை ஆகியவற்றை வைத்து அவரது தலையில் அடித்ததாக கூறியுள்ளார். அவரை நான் பரிசோதிக்கும் போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

**காயம் 1.** இடது பக்க தலையில் 15 x 2 x 1 cm அளவுக் கொண்ட சிதைவுக் காயம் காணப்பட்டது.

3. அவரை சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதித்து 01.01.2016–ம் தேதி விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என்று சான்று கொடுக்கப்பட்டது. **அந்த காயச்சான்று அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. மேலும் அதே தேதியில் மேற்படி மருத்துவர் சதீஷ் என்பவர் இரவு 08.55 மணிக்கு பணியில் இருந்த பொழுது 30 வயது மதிக்கத்தக்க ஜான் செல்லத்துரை என்பவரின் மகன் **ஜான் பிரிட்டோ சார்லி** என்பவர் காயசிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை பெயர் தெரியாத நபர்கள் கொண்ட ஒரு கும்பல் பணவிளை, குருசடி சந்திப்பில் வைத்து 25.12.2015–ம் தேதி இரவு 08.30 மணிக்கு இரும்புக் கம்பி, மரக்கட்டை ஆகியவற்றை வைத்து அவரது தலையில் அடித்ததாக கூறியுள்ளார். அவரை நான் பரிசோதிக்கும் போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

**காயம் 1.** நெற்றியில் 2 x 1 x 1 cm அளவுக் கொண்ட வெட்டுக் காயம் காணப்பட்டது.

**காயம் 2.** இடது பக்கத் தலையில் 6 x 2 x 0.1 cm அளவுக் கொண்ட வெட்டுக் காயம் காணப்பட்டது.

**காயம் 3.** பின் பக்கத் தலையில் 3 x 1 x 1 cm அளவுக் கொண்ட வெட்டுக் காயம் காணப்பட்டது.

**காயம் 4.** இடது பக்கத் வயிற்றில் 4 x 0.5 x 0.4 cm அளவுக் கொண்ட சிதைவுக் காயம் காணப்பட்டது.

5. அவரை சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதித்து, பின் சிகிச்சை முடிந்து 01.01.2016–ம் தேதி விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என்று சான்று கொடுக்கப்பட்டது. **அந்த காயச்சான்று அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. மேலும் அதே தேதியில் மேற்படி மருத்துவர் சதீஷ் என்பவர் இரவு 08.56 மணிக்கு பணியில் இருந்த பொழுது 65 வயது மதிக்கத்தக்க சுவாமிக்கண் என்பவரின்

மகன் **சுப்பையா** என்பவர் காயசிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை பெயர் தெரியாத 30 நபர்கள் கொண்ட ஒரு கும்பல் பணவிளை, பணவிணை பள்ளி அருசகே வைத்து 25.12.2015–ம் தேதி இரவு 08.30 மணிக்கு இரும்புக் கம்பி, மரக்கட்டை ஆகியவற்றை வைத்து அடித்ததாக கூறியுள்ளார். அவரை நான் பரிசோதிக்கும் போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

**காயம் 1.** வலது கால் பாதத்தில் 10 x 3 x 2 cm அளவுக் கொண்ட சிதைவுக் காயம் காணப்பட்டது.

**காயம் 2.** வலது கால் பாதத்தில் 4 x 2 x 0.5 cm அளவுக் கொண்ட சிதைவுக் காயம் காணப்பட்டது.

**காயம் 3.** வலது பக்க தலையில் வலது காதுக்கு அருகேல் பாதத்தில் 3 x 3 x 0.5 cm மற்றும் 5 x 5 x 0.5 cm அளவுக் கொண்ட சிதைவுக் காயம் காணப்பட்டது.

**காயம் 4.** இடது கன்னத்தில் 10 cm அளவுக் கொண்ட இரத்தக்கட்டு காயம் காணப்பட்டது.

**காயம் 5.** வலது கன்னத்தில் சிராய்புக் காயம் காணப்பட்டது.

7. அவரை சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதித்து 03.01.2016–ம் தேதி விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என்று சான்று கொடுக்கப்பட்டது. **அந்த காயச்சான்று அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. மேலும் அதே தேதியில் மேற்படி மருத்துவர் சதீஷ் என்பவர் இரவு 08.57 மணிக்கு பணியில் இருந்த பொழுது 29 வயது மதிக்கத்தக்க சுப்பையா என்பவரின் மகன் **சுபாஷ்** என்பவர் காயசிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை பெயர் தெரியாத நபர்கள் கொண்ட ஒரு கும்பல் பணவிளை, குருசடி சந்திப்பில் வைத்து 25.12.2015–ம் தேதி இரவு 08.30 மணிக்கு இரும்புக் கம்பி, மரக்கட்டை ஆகியவற்றை வைத்து அடித்ததாக கூறியுள்ளார். அவரை நான் பரிசோதிக்கும் போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

**காயம் 1.** இடது காலில் 2 x 1 x 1 cm அளவுக் கொண்ட சிதைவுக் காயம் காணப்பட்டது.

**காயம் 2.** முன்தலைப் பகுதியில் 10 x 1 x 1.5 cm அளவுக் கொண்ட சிதைவுக் காயம் காணப்பட்டது.

9. அவரை சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதித்து சிகிக்சை அளிக்கப்பட்டது. அவர் சிகிச்சை முடிந்து 01.01.2016-ம் தேதி விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என்று சான்று கொடுக்கப்பட்டது. **அந்த காயச்சான்று அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

10. மேலும் அதே தேதியில் மேற்படி மருத்துவர் சதீஷ் என்பவர் இரவு 09.25 மணிக்கு பணியில் இருந்த பொழுது 54 வயது மதிக்கத்தக்க நாராயணப்பெருமாள் என்பவரின் மகன் **இராமச்சந்திரன்** என்பவர் காயசிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை பெயர் தெரியாத நபர்கள் கொண்ட ஒரு கும்பல் பணவிளை, குருசடை சந்திப்பில் வைத்து 25.12.2015-ம் தேதி இரவு 08.30 மணிக்கு இரும்புக் கம்பி, மரக்கட்டை ஆகியவற்றை வைத்து அவரது இடது கண்ணத்திலும், பின்பகுதியிலும் அடித்ததாக கூறியுள்ளார். அவரை நான் பரிசோதிக்கும் போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

**காயம் 1.** வலது தோள்பட்டையின் பின்புறம் 15 cm சுற்றளவுக் கொண்ட இரத்தக் காயம் காணப்பட்டது.

**காயம் 2.** முதல் இரத்தக்கட்டுக் காயத்தின் நடுப்பகுதியில் 1 x 0.5 x 0.5 cm அளவுக் கொண்ட சிதைவுக் காயம் காணப்பட்டது.

**காயம் 3.** கீழ் உதட்டில் 2 x 1 x 0.5 cm அளவுக் கொண்ட சிதைவுக் காயம் காணப்பட்டது.

11. மேலும் இடது கண்ணத்தில் வலி இருப்பதாக கூறியுள்ளார். அவரை சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதித்து பின் சிசிச்சை முடிந்து 01.01.2016-ம் தேதி விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என்று சான்று கொடுக்கப்பட்டது. **அந்த காயச்சான்று அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்புக் குறுக்கு விசாரணை</u>** :

1. காயம்பட்ட நபர் சுபாஷ் என்பவருக்கு முதுகுப் பகுதியில் காயம் எதுவும் காணப்படவில்லை என்றால், சரிதான். சுப்பையா என்பவர் பணவிளை பள்ளிக்கு

அருகே சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார் என்றாலும், மற்ற காயம்பட்ட நபர்கள் பணவிளை, குருசடி சந்திப்பில் சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார்கள் என்றால், சரிதான்.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.